**அக்டோபர் - 14**

**"பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்."**

**- நீதி 21:3.**

நாம் அன்பில் வளர வேண்டியவர்களாயிருக்கிறோம். அன்பே முக்கியம். ஆனால் அன்பின் வளர்ச்சியில் நாம் அதிக அபிவிருத்தி அடைவதற்கு முன்பு நாம் மன உண்மையாயிருக்கவும், நியாயமாயிருக்கவும் நீதியுள்ளவர்களாயிருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் தாராள மனமுடையவனாய் இருப்பதற்கு முன்பு அவன் மன உண்மையாயிருக்க வேண்டும் என்ற நீதி மொழியிலுள்ள விஷயம் தகுந்த விதமாக இங்கே சமர்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், தொடர்ந்து இந்த நீதியின் விஷயத்தை ஆராய்ந்து பார்ப்பதும் தெய்வீக வார்த்தையில் கற்பிக்கப்பட்டிருக்கிற பாடங்களை ஒவ்வொரு நாளும் அப்பியாசிப்பதும் கர்த்தருடைய ஜனங்களுக்குத் தகுதியாயிருக்கிறது. அன்பைக் கட்டியெழுப்ப அவர்கள் ஆரம்பிப்பதற்கு முன்பு இந்தத் தகுதியான குணத்தின் அஸ்திபாரத்தைப் பெறுகிறவர்கள் தாங்கள் தகுந்த விதமாய் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதைக்கண்டு கொள்ளுவார்கள். அநீதியின் மேலும், நீதியைக் குறித்துத் தப்பிதமான கருத்துக்களின் மேலும் ஸ்தாபிக்கப்படுகிற எல்லா அன்பும் ஏமாற்றத்தக்கது. சீஷனாயிருப்பதற்குரிய சோதனையாகக் கர்த்தர் கேட்கும் அன்பு அந்த அன்பல்ல. **- Z ’04, 56, 57 (R 3321)**

நியாயம் இங்கே உண்மையான போதனைகளைக் குறிக்கும். பலி, சாதாரணமாக அன்பின் நற்கிரியைகளைக் குறிக்கும். ஆனால், இங்கே பலி, நீதி, சத்தியம் இவைகளுக்கு எதிரிடையாகச் செய்யப்படுகிற நல்ல கிரியைகளைக் குறிக்கிறது. பலி, கர்த்தரால் விரும்பப்படுகிறதில்லை என்று மூலவாக்கியம் குறிக்கவில்லை. அன்பின் நற்கிரியை இல்லாத நீதி, சத்தியம் இவைகளைவிட, அன்பின் கிரியைகள் நீதிக்கும் சத்தியத்துக்கும் இணக்கமாக இருக்கும் பொழுது கர்த்தருக்கு அதிகப் பிரியமானதாயிருக்கிறது. நாம் நீதிக்கும் சத்தியத்துக்கும் மாறாக பலியின் ஊழியம் செய்வதை விட நாம் பலியின் ஊழியமில்லாத நீதியின் சத்தியத்தின் கிரியைகளை நடப்பிப்பது நல்லதென்று கர்த்தர் விரும்புகிறார். **- P ’26, 156.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**1சாமு 15:22; சங் 1:3; 15; 24:3-5; 106:3; 112:4-8; நீதி 2:5-20; ஏசா 32:16-18; ஓசி 6:6; மீகா 6:6-8; மத் 5:20; யோவா 14:21-24; 15:4,5,8; ரோம 6:19-22; 14:17-19; 1கொரி 13:1-7**

**கோபுர வாசிப்பு : Z ’14, 100 (R 5430).**

**வினாக்கள் : நான் இந்த வாரத்தில் சத்தியத்திற்கும் நீதிக்கும் மாறான பலியைவிட சத்தியத்தையும், நீதியையும் செய்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?**